JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC/ 126/2025

: Prosecution P.W –4

NAME : சுப்புராஜ்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது கடையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் சுரேஷ் ஆகியோர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நன்றாக தெரியும் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.03.2018 ம் தேதி 14.00 மணிக்கு மேற்படி தலைமை காவலர் நிலைய பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தங்கம் என்பவரிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 87/2018 இதசபிரிவுகள் 147,294(b), 323,324, 506(2)IPc and 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார்வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் வாக்குமூலம் அசாஆ 2 ஆகவும் மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கை

புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 28.03.2018 ம் தேதி 16.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் வேல்முருகன் மற்றும் சமுத்திரம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் தங்கம், இசக்கி, ஆனந்த், மாரியப்பன், சின்னதம்பி, மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் பாலசுப்பிரமணியன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1,2,3,5 ஆகிய எதிரிகள் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்றுவிட்டதால் கைது செய்யவில்லை. மற்ற எதிரிகளை 07.04.2018 ம் தேதி கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர் கெரிசன்கெப்ரினா என்பவரை விசாரித்து காயசான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி காயச்சான்றுகள் எண்ணம் இரண்டு அ.சா.ஆ 6 மற்றும் அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையானதால் இதச பிரிவுகள் 147,294(b), 323,324, 506(2)IPc and 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை 11.04.2018 ல் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொன்னாலும், நான் சொன்னபடி சொன்னதுபோல் எதிரிகள் கைதுசெய்யபடவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்பட்சமாக விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi